**இமதுவ பிரதேச சபை - 2023**
----------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

இமதுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, இமதுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமானதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தளபாடங்கள் பொருத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 309,650 தொகை மற்றும் ரூபா 105,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தொடர்ந்தும் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என. | செலவு விடயங்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காணிகள் மற்றும் கட்டிடங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 592,298 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்யப்பட்டது என. | மூலதனப்படுத்த வேண்டிய செலவுகளை மூலதனப்படுத்த வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது பிரதியீடு செய்யப்பட்ட ரூபா 250,000 இற்கான வைப்புத் தொகையையும் வைப்புக் கணக்கிலிருந்து அகற்றியிருக்காமையால் வைப்புக்கள் அத் தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | தொடர்ந்தும் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என. | தீர்க்கப்பட்ட வைப்புக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | கூட்டுப்பெறுமதி ரூபா 55,137 தொகைக்கான 23 அலகுகள் பொருட் பதிவேட்டுப் பண்டங்கள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் பதியப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | தொடர்ந்தும் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என. | பொருட் பதிவேட்டு இருப்புக்கள் மூலதனப்படுத்தக் கூடாது. |
| (உ) | ரூபா 123,100 பெறுமதிக்கு கொள்வனவு செய்திருந்த இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பிரதான பேரேட்டில் ரூபா 109,600 தொகையென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 இறுதிக் கணக்குகள் மூலம் நாட்குறிப்புப் பதிவேடுகள் ஊடாக சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு தொடர்பாக மிகையாக கிடைத்திருந்த ரூபா 7,207,102 இற்கான தொகை செலுத்த வேண்டிய மீதியொன்றென நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2024 இறுதிக் கணக்குகள் மூலம் நாட்குறிப்புப் பதிவேடுகள் ஊடாக சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 108,504 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட துணைப் பதிவேடுகள் மற்றும் கணக்குகளிடையே இணக்கஞ் செய்யப்படாமையினால் குறிப்பிட்ட மீதி ஏற்பட்டிருந்தது என. | துணைப் பதிவேடுகள் மற்றும் நிதிக் கூற்றுக்களிடையே இணக்கமொன்று மேற்கொள்ள வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 34,325,464 தொகைக்கான 11 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | சரியான அட்டவணைகள் தயாரித்து சமர்ப்பிக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 132 | ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் வெளி மாகாணங்களிலுள்ள காணிப் பதிவு அலுவலகங்களில் இருந்து பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 5,286,615 தொகையினை அறவீடு செய்வதற்காக சபையின் செயலாளர் மற்றும் இரண்டு உத்தியோகத்தர்களுக்காக ஊக்குவிப்பு கொடுப்பனவு என சபை நிதியத்திலிருந்து ரூபா 138,597 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவு செய்யப்பட்டதை ஏற்றுக்கொள்கின்றேன் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 11,080,978 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 6,273,156 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,385,000 | 6,262,385 | 6,508,920 | 1,812,169 | 2,920,600 | 4,131,840 | 4,314,319 | 2,058,704 |
| வாடகை | 5,268,000 | 3,509,356 | 3,509,356 | - | 4,411,000 | 1,889,800 | 1,889,800 | - |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,336,000 | 1,109,245 | 1,127,245 | 82,100 | 927,200 | 1,434,171 | 1,448,671 | 100,100 |
| ஏனைய வருமானங்கள் | 41,616,500 | 7,459,843 | 7,517,041 | 242,232 | 6,847,700 | 6,305,641 | 6,313,776 | 299,430 |
| | 54,605,500 | 18,340,829 | 18,662,562 | 2,136,501 | 15,106,500 | 13,761,452 | 13,966,566 | 2,458,234 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 2,458,234 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,136,501 இற்கான நிலுவை மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்ளப்பட்டது என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 49 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்பட்டதுடன் சபையினால் அவற்றில் 02 பிரிவுகள் தொடர்பாக மாத்திரம் வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வீதவரி சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | புதிய வீதவரி பிரதேசங்கள் இனங்காணப்பட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2023 ஆண்டிற்காக எதுவித வீதவரி தொகையும் செலுத்தி இருக்காத 150 ஆதனங்களில் இருந்து ரூபா 923,541 | நிலுவையை அறவீடு செய்வதற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | வீதவரி அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | | |
| (ஈ) | சபையின் எல்லையில் காணப்பட்ட 68 அறிவித்தல் பலகைகளில் இருந்து ரூபா 1,513,680 இற்கான வருமானம் ஒன்றினை அறவீடு செய்திருக்கவில்லை. | கடிதங்களின் மூலம் குறிப்பிட்ட நபர்களுக்கு அறிவுருத்தப்பட்டது என. | கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 13,169,514 தொகை காணப்பட்டது. | 2024.05.13 திகதியளவில் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் இமதுவ சபைக்கு கிடைத்து முடிந்துள்ளது என. | உரிய தினத்தில் நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 89 கைத்தொழில்கள் அந்த அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளாமல் வர்த்தக நடவடிக்கைகளை நடாத்திச் சென்றிருந்தமையால் ரூபா 400,500 இற்கான வருமானமொன்றை இழந்திருந்ததுடன் அவற்றை அறவீடு செய்வதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என. | உரிய முறையில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | ரூபா 100,000 தொகை கிரயத்தையுடைய 49-0342 கொண்ட டிரக்டர் வண்டியின் பகுதிகளை மற்றும் பதிவு செய்த இலக்கம் மற்றும் கிரயத்தை இனங்காண முடியாத டேலரின் சேதமடைந்த பண்டங்கள் 10 வருட காலம் முதல் உப அலுவலக வளவில் குவிக்கப்பட்டிருந்தது. | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் பரிந்துரை கிடைத்த பின்னர் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | சிதைந்த பண்டங்கள் தொடர்பாக சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்று தொடர்பாக அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த 334.7 சதுர மீற்றருக்காக ரூபா 502,050 தொகையும் | சட்ட செயற்பாடுகளுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | வர்த்தமானியின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

10 வாகனத் தரிப்பிடங்களுக்காக ரூபா 2,500,000 தொகையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டில் சபைக்கு வழங்கியிருந்த ரூபா 7,967,144 கிரயத்தையுடைய (பொடோன்) இரும்பு உருளை 2 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | லிவரை செயற்படுத்துவதற்கு முடியாமல் உள்ளது என. | சொத்துக்களை பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2014 ஆண்டில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,655,318 தொகை பெறுமதியான டிரக்டர் 2019 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த வாகனத்தை வேறொரு வாகனத்துடன் பரிமாறிக் கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் வேண்டப்பட்டுள்ளது என. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 வருடங்களுக்கு முன்னர் ரூபா 9,605,882 இற்கான செலவொன்று மேற்கொண்டு இமதுவ நகர மத்தியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 260 சதுர மீற்றருக்கான வர்த்தக கட்டிடத் தொகுதியை ஆக்கபூர்வமான பொருளாதார அலுவல் ஒன்றிற்காக பயன்படுத்தக் கூடியவாறு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | பயன்தரு பொருளாதார அலுவல்களுக்காக ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது என. | வர்த்தக கட்டிடத் தொகுதியை பயன்தரு பொருளாதார அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2022/2023 ஆண்டின் போது சபை நிதியத்தின் மூலம் 05 பாதைகள் தொடர்பாக 640 சதுர மீற்றர்கள் அடங்கக் கூடியவாறு பாதைகளை கொங்கிரீட் பண்ணப்பட்டிருந்த போதிலும் அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த வேலையின் அளவு தொடர்பாக உறுதிப்பாடொன்று பெற்றுக் கொள்ளாமல் 23 இயந்திர மணித்தியாலங்களுக்காக ரூபா 119,970 தொகை முறைசாரா விதமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த 04 பாதைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மீற்றர் மணித்தியாலங்களின் எண்ணிக்கை 34 ஆகக் காணப்பட்ட போதிலும் செய்யப்பட்ட வேலையின் தன்மையின் படி 23 மணித்தியாலங்களுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டது என. | வேலை செய்யப்பட்ட பௌதீக அளவின் படி கொடுப்பனவு செய்வதற்கு உரிய ரேட்கள் பயன்படுத்த வேண்டும். |
| (இ) | ஹொரதுகொட மெகிலியில் இருந்து கோதாகொட தாரமுள்ள வரை வாய்கால் அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக வேலை விடய | மிகையாக செலுத்திய தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | குறிப்பிட்ட ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலக்கம் 02 இன் கீழ் வடிகால் வெட்டும் அலுவல்களுக்காக ரூபா 26,048 தொகையும் வேலை விடய இலக்கம் 03 இன் கீழ் வெட்டப்பட்ட மண்ணை பயன்படுத்தி வாய்க்காலின் அணைக்கட்டு தயாரிப்பதற்காக ரூபா 442,959 தொகையும் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள மூன்று ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 182,510 இற்கான கடன் மீதியொன்று காணப்பட்டது. | அவர்களுக்கு ஓய்வூதிய உரிமை காணப்படாமையால் அறவீடு செய்ய முடியாமல் உள்ளது என. | ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |